# True Disciple

# உண்மை சீஷன்

November - December 2017 நவம்பர் - டிசம்பர்

## YOU WILL SEE GREATER THINGS THAN THESE

## இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்

யோவான் 1 : 50



# YOU WILL SEE GREATER THINGS THAN THESE

***Rev. Dr. Jerry Daniel***

*Jesus said, "You will see greater things than these."*
*Most assuredly, I say to you, hereafter you shall see heaven open,*
*and the angels of God ascending and descending…"*
(John 1:50, 51)

As City Revival AG Church is entering into third year of ministry, God has given three promises found in John 1:50, 51. Greater Things-Open Heaven-Ministry of Angels. This is the Jesus' first personal word of promise. It is no insignificant promise, but full of the largest conceivable meaning. There is room for boundless expectation in these words of Jesus!

## THREE PROMISES

### 1. GREATER THINGS THAN THESE

Nathaniel found out that Jesus was omniscient when Jesus said, "I saw you when you were under the fig tree even before Philip had called you." Jesus also read his mind and heart and said, "You are a true Israelite in whom is no guile". Jesus knows everything. He is omniscient. Now Jesus seems to be saying to him, "You have seen my omniscience and from now on you will see my omnipotence." You will see my power over nature, diseases, demons, death etc. You will see me turning water into wine, feeding the 5000, walking on the water, healing the lame and raising the dead.

Dearly beloved, you would have seen and experienced God in certain dimensions in the past years. From now on, you would see **"greater things,"** because you would see more of the Godhead. Did you see omniscience? You shall see omnipotence. Did you discover that he could read your heart? You shall learn that he can change your heart. Did you find that his eye could glance into the secrets of your soul? You shall find his word casting out demons, and healing the sick, and hushing the tempests.

### 2. OPEN HEAVEN

An *"Open Heaven"* is where there's a nearness of Heaven to earth. There's a sense of God's manifest presence (Isaiah 64:1-3). When the heavens are open, we will receive **heavenly power**. Jesus saw heavens open and the Spirit descending upon him like a dove (Mark 1:10). With the power of the Holy Spirit he overcame the temptations, cast out demons, healed the sick and preached the gospel (Acts 10:38;

Luke 4:18). The Lord will fill us also with that power and use us for His glory!

When the heavens are open, we will see **heavenly visions and revelations.** Ezekiel, Stephen, Peter and John all saw an open heaven (Ezekiel 1:1, 28; Acts 7:56; 10:11; Rev. 4:1, 2; 19:11). They had visions about the knowledge of God, about God's plan for their lives and ministry and about the coming of the Lord Jesus Christ. The Lord will give visions to us also!

When the heavens are open, we will receive **heavenly provisions.** The Bible tells us that God opened heaven to provide miraculous provision to the nation of Israel during its wilderness wanderings. 'He gave a command to the skies above and opened the doors of the heavens; he rained down manna for the people to eat, he gave them the grain of heaven' (Ps 78:23-24). Israel's destiny was to live in Canaan under open heaven and continue a lifestyle of faith. 'The LORD will open the heavens, the storehouse of his bounty, to send rain on your land in season and to bless all the work of your hands' (Deut. 28:12).

## 3. MINISTRY OF ANGELS

Angels are actively involved in the lives of God's people. The ranks of the holy angels include **messenger angels, ministering angels,** and **martial angels.**

There are **messenger angels** who came to priests like Zacharias, and to people like Elizabeth and Mary (Luke 1:13, 18, 19, 28, 30, 35). They bring good news and message of hope and encouragement. There are **ministering angels** such as those who came to apostles like Peter and Paul to deliver them (Acts 5, 12:7-10, 27:23), who care for little children (Matt. 18:10), who came to Christ in the wilderness and the Garden (Mark 1:13; Luke 22:43), and who are concerned for Children of God (Psalm 91:11). There are **martial angels** who do battle against God's human foes. Angels are magnificent creatures, not at all like the tiny, childlike cherubs that we see in some art. Their power is so great that just one angel was able to destroy 185,000 Assyrian soldiers in one night (2 Kings 19:35). One angel struck Herod and he was eaten by worms (Acts 12: 21-23). These angels fight against Satan as described in Daniel and Revelation (Rev. 12:7).

There is no doubt that the angels help protect (Daniel 6:20-23; 2 Kings 6:13-17), reveal information (Acts 7:52-53; Luke 1:11-20), guide (Matthew 1:20-21; Acts 8:26), provide for (Genesis 21:17-20; 1 Kings 19:5-7), and minister to believers in general (Hebrews 1:14). We will experience the ministry of these angels in the coming days!

## THREE CONDITIONS

The promises in John 1:50 and 51 were primarily given to Nathanael. We see some characteristics in this man which moved Jesus to give him the above word of promise. We need to have these qualities in order to claim the above promises.

## 1. BE A PERSON WITHOUT GUILE

The moment Jesus set eyes on Nathanael, He said, **"Behold an Israelite indeed, in whom is no guile!"** The word translated "guile" here is the same word used in Genesis 27:35 to convey the idea of guile or subtlety. Genesis 27 tells us of Jacob's guile. Jesus used the same word Isaac did when He described Nathanael as an Israelite in whom was no subtlety or guile. John 1:47 has frequently been paraphrased, "Behold an Israelite indeed in whom is no Jacob!" Nathanael was an Israelite singularly free from the guile, crookedness, and subtlety of Jacob. We must also get rid of all malice and guile (1 Pet. 2:1). Blessed is the man in whose spirit there is no guile (Ps. 32:2). There should be no craftiness, no deception, no double-dealing, no falsehood, no fraudulence, no hypocrisy found in our lives (1 Thess. 2:3; 1 Pet. 2:22; Rev. 14:5).

## 2. BE A PERSON OF GOD'S WORD

Nathanael was a great searcher of the Scripture and a scholar in the law and the prophets. It could be inferred that Nathanael had been reading his Bible when Jesus saw him under the fig tree. The Lord now referred to Genesis 28:12, apparently the chapter and the verse upon which Nathanael had been meditating. Philip told Nathanael, "We have found him, of whom Moses in the law, and the prophets, did write, Jesus of Nazareth." Probably the two friends had often pored over the Old Testament Scriptures together, searching out the many prophecies concerning the coming of Christ. Since Nathanael knew from the Scriptures that Messiah would come from Judea, he raised a legitimate question- Can anything good come out of Nazareth? We must be like Bereans in searching the Scriptures (Acts 17:11). We must also ask 'What does the Bible say?" concerning every issue of our life (Rom. 4:3; 10:8; 11:2).

## 3. BE A PERSON OF FAITH

Nathanael recognized Jesus as Son of God and King of Israel and put his faith in Him. He became a sincere follower and disciple of Jesus till the end. Faith is the key to receive the promises of God. Jesus said, "Everything is possible for one who believes" (Mark 9:23). We can inherit the promises of God through faith (Heb. 6:11, 12). May the Lord bless everyone with the blessings given above!!

# How to Behave in the Church?



- **The Church is a FAMILY** (Eph. 3:15; 4:6).
  Therefore we must live with mutual trust, respect and cooperation.
- **The Church is a FELLOWSHIP** (Acts 2:42-45; 1 Jn. 1:3).
  Therefore we must share with others the privileges and profits, and support one another in crises and sorrows.
- **The Church is a BODY** (1 Cor. 12:12,27; Eph. 4:16).
  Therefore we must unselfishly care for one another and help the weak with kindness and loving concern.
- **The Church is a BUILDING** (Eph. 2:19-22; 1 Cor. 3:9).
  Therefore we must stay happy and humble in the position in which God has placed us, without boasting of ourselves or despising anyone.
- **The Church is a SCHOOL** (Eph. 3:18,19; 4:11-14).
  Therefore we must not neglect the regular gathering of the saints for edification and education.
- **The Church is a FLOCK** (1 Pet. 2:25; 5:2-5).
  Therefore we must not be independent but interdependent and cooperative in whatever we do, following the Shepherd of our souls.
- **The Church is a HOUSE** (1 Tim. 3:15; Heb. 3:6).
  Therefore we must fill it with the fragrance of the knowledge of Christ to bless the residents with relaxation and refreshing.
- **The Church is a FIELD** (1 Cor. 3:9; Heb. 6:7-12).
  Therefore we must ask for and experience more and more of the Spirit's outpouring, and in response give much fruit.
- **The Church is an ARMY** (Eph. 6:12; 2 Cor. 10:3-6).
  Therefore we must be watchful always against the attacks of the enemy and march boldly and unitedly to free people from the devil's captivity.
- **The Church is a LAMP** (Mt 5:14-16; Phil. 2:14-16).
  Therefore we must live an exemplary life before the world and dispel darkness by consistently testifying about Jesus, the Light of the World.

Courtesy: Blessing

# Why was Christ Born?

Greetings in the name of the historical Christ whose birth divided the world history into BC (before Christ) and AD (anno Domini)! Every year all over the world millions of people celebrate the birth of Christ. Let's meditate why Christ was born 2017 years ago and what is our role in his birth.

**The Purpose of Christ's Birth**

1. **To REVEAL God**

   "No man hath seen God at any time, the only begotten Son, which is in the bosom of the Father, he hath declared him," says the Bible (John1:18). Christ was born to reveal God's love, compassion, kindness and power. "He that has seen me has seen the Father"( John 14:9). God came down to this world in the form of Christ. God revealed himself so as to relate himself with man, to take part in his sufferings and redeem him from his problems.

2. **To REDEEM Mankind**

   Christ was born in this world as a Saviour and Redeemer. Jesus means Redeemer (Mathew 1:21). Christ redeems us from the following:

✳ **Sins :** Christ who was born sinless redeems us from all our sins. The blood that Christ shed for us on the cross redeems us from all our original sins and from the sins of our deeds. (I John1:7). We are all born in sin and the wages of sin is death (Romans 6:23). But Jesus from heaven gives us redemption and eternal life.

✳ **Curse :** Jesus was born in this world to redeem people from their curses, failures and disappointments in their life. He took their entire curse on the cross. Thereby He turned their curse into blessing (Gal.3:13). He can wipe away the poverty in your life. Christ who changed the water into wine, fed the 5000 with 5 loaves and 2 fishes can redeem you from all your trouble and fulfill all your needs.

✳ **Sickness :** Jesus came to this world to redeem us from all our sickness and give us new life. He took our infirmities, and bore our sicknesses (Matthew 8:17). " He was wounded for our transgressions, he was bruised for our iniquities: the chastisement of our peace was upon him; and with his stripes we are healed" (Isaiah 53:5) says the Bible. Jesus can heal us from all our infirmities.

✳ **Fear :** Jesus redeems us from all our fears. "And delivers them, who through the fear of death were all their lifetime subject to bondage" (Hebrews2:15).

When Jesus was born the angels proclaimed the good news of "Fear Not" to all the people (Luke 1:13, 30, 2:10, Matt 1:20,24). Fear is a dreadful feeling. Today, fear about future, fear about death, fear of failure and so on torments mankind. But Jesus redeems us from all these fears.

3. **To RUIN Satan**

   "The Son of God was manifested, that he might destroy the works of the devil" (I John 3:8). Today the devil is deceiving mankind and ruining their lives. "The thief cometh not, but for to steal, and to kill, and to destroy: I am come that they might have life, and that they might have it more abundantly". (John 10:10). Jesus delivered many from the bondage of Satan. Finally at the cross he triumphed over Satan and destroyed him. Since Jesus rose again from the grave on the third day and is still alive, he redeems those who are in the clutches of Satan (Acts 10:38).

**Our Role in the Birth of Christ**

1. **Give Room for Jesus in your Heart :** When Jesus, the Redeemer of the World, was born, there was no room in the inn (Luke 2:7). But whosoever gives a place in their heart to Jesus is called the children of God (John1:12). He is still knocking at the door of your heart (Rev 3:20). When you surrender your life to Him, he will dwell in you and give you redemption and peace. Today, is there a room in your heart for Him?
2. **Proclaim The Good News About Christmas To Others.** The Bible says that the shepherds shared the good news about Jesus' birth to others (Luke 2:17). We know about the birth of Jesus and the reason for his birth, but there are multitudes in your city and nation who don't know about him. Has not Jesus given us the great commission to proclaim the gospel? (Matt. 28:18-20, I Cor. 9:16). Let's introduce this Jesus, who came to this world to give his life for us, to all those who have not heard about him. Let's share the love of God by giving gifts to the poor and needy. Let's fulfill our role in Jesus Christ's birth. May God Bless You Abundantly!



**City Revival A.G. Church**
**wishes you all a**

**MERRY CHRISTMAS**




# IS INTERNET DANGEROUS?

Telephone helps us to stay connected with anyone in any part of the world. And in today's tech-savvy world internet links all the computers which have net facility. It's a web but does it ensnare us? Keep reading..



## 1. Use of Internet

- Helps to send and receive information at any time from any place.
- Helps in getting access to information about anything
- Internet games, videos and short films entertain us.
- Through internet banking services, all bank transactions can be done online.
- On line booking of bus/ train tickets saves us from standing in long queue.
- According to 2017 survey 45 Crore internet users are in India. It is calculated that by 2020 the number of netizens would escalate to 70 Crores.

## 2. A Word of Caution

Though internet is useful, Beware! It can also ruin one's life. Read the following to know more about it.

**1) Never Waste Time :** Don't spend excess time browsing the net, especially during your prime time, when you are fresh and agile. You can make the best use of it to study. When spent in internet it is a sheer waste of time.

**2) Never Sacrifice your Sleep :** After 10 O'Clock many netizens brows internet unaware of how long they spend in browsing. This result in sleep loss and leads to tiredness during day time. A minimum of 6 hrs of sleep is essential for an individual to be healthy. After 9 O'Clock…

- 82% of the youth would be watching TV
- 55% of the youngsters browse net
- 44% of the younger generation would be still chatting over phone
- 34% of them would be texting
- Only 21% of them have the required 8 hours of sleep.

**3) Never Sacrifice your Quite Time :** Nothing is more important than reading and meditating the Word of God. When internet is your priority it becomes your idol. As you lose interest in prayer and reading the word of God, backsliding sets in.

**4) Never Waste your Money :** Budget your internet expenses and never over spend on it. You are accountable about your money to God.

**5) Never Sacrifice your Health :** Spending more time in front of computers might cause back pain, neck pain, obesity, vision disorder, hearing impairment etc. Once health is lost, it can never be regained at any expense.

**6) Never Keep Computer in a Secluded Place :** When computer is kept in a private place there are more chances of yielding to the temptation to browse unwanted web sites and this corrupts our holiness. So keep the computer in a place where all the members of the family can have access. This saves us from sin.

**7) Never Sacrifice Family Bonding :** Spending more time in front of computer leads to isolation and prevents one from spending quality time with family and thereby breaks interpersonal relationships.

**8) Use Internet Judiciously :** Don't browse internet aimlessly. Use only when it is needed. When one browses to just while away time, one may stumble upon unwanted contents and later feel guilty for browsing them.

**9) Never Browse Unwanted Advertisement :** While browsing never click any unnecessary advertisement, for one seemingly harmless hyperlink might connect you to unnecessary and unwanted web sites. So be careful with the very first click of the mouse since it takes you beyond boundaries.

**10) Never Chat with Strangers :** In the world of internet one might not know whether the stranger with whom one chats is a good or bad person, married or unmarried etc. so don't chat with strangers. Beware, do not be ensnared!

Translation by Dr. Sheebha

## வாலிபர் ஐக்கியம் - Youth Fellowship


I & III

**ஞாயிற்றுக்கிழமை**

**மாலை 4.30 மணி முதல்**
**6.00 மணி வரை**

திருச்சபையிலுள்ள
அனைத்து வாலிபர்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship



**3வது திங்கட்கிழமை மாலை 7.00 மணி**

திருச்சபையிலுள்ள அனைத்து ஆண்களும் பங்குபெறும்படி அன்புடன் அழைக்கிறோம்.

---

# இசைப் பயிற்சி வகுப்புகள்

## Music Classes

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**
ஜென்னி பிளாசா, திருச்சி – 1.

Guitar, Keyboard, Rhythm Pad & Drums

**செவ்வாய் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.15 மணி வரை**

---

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

**Account Name: City Revival AG Church**
**Account Number: 35354599169**
**Bank Name: State Bank of India**
**IFSC Code: SBIN0000930**
**Branch Code & Address: 00930**
**Tiruchirappalli Main Branch,**
**7, MacDonalds Road, Cantonment, Trichy – 620 001**

Kindly intimate us through email or sms immediately after you have sent your offering through bank transfer so that we can confirm the receipt of your offering.

# இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

இயேசு, " இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் " என்றார். வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள். என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். (யோவான் 1:50,51)

மூன்றாம் ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கும் நமது சபைக்கும், சபை விசுவாசிகளுக்கும், யோவான் 1:50,51 வசனங்களில் காணப்படும் மூன்று ஆசிர்வாதங்களை தேவன் வாக்குப் பண்ணுகிறார். இதிலும் பெரிய காரியங்கள் - திறந்தவானம் - தேவ தூதர்களின் உதவி. இது இரட்சகராகிய இயேசு கூறின் முதலாவது வாக்குத்தத்தவார்த்தையாகும். இதில் அளவற்ற அறிவுக் கெட்டாத சிர்வாதங்களை அடங்கியிருப்பதை நாம் காண முடியும்.

**மூன்று வாக்குத்தத்தங்கள்**

**1. இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்**

பிலிப்பு உன்னை அழைக்கும் முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும் போது உன்னை கண்டேன் என்று இயேசு கூறின போது, நாதத்தான்வேல் இயேசு சகலத்தையும் அறிந்தவர் என்பதை அறிந்துக் கொண்டான். இயேசு அவனுடைய இருதயத்தையும் அறிந்து, அவனைப் பார்த்து இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். இப்பொழுது இயேசு நாத்தான்வேலை பார்த்துக் கூறுகிறார், நீ என்னை சகலத்தையும் அறிந்தவர் என்பதை அறிந்து கொண்டாய். இது முதற்கொண்டு நான் சர்வ வல்லமை உள்ளவர், சகலமும் செய்ய வல்லவர் என்பதை காண்பாய். இயற்கை மீதும், வியாதி, மரணம், சாத்தான் மேலும் எனக்கு வல்லமை உண்டு என்பதை அறிந்து கொள்வாய். தண்ணிர்த் திராட்சை ரசமாக மாறுவதை காண்பாய், 5000 பேருக்கு போஜனம் கொடுப்பதை காண்பாய், குருடரை சுகமாக்குவதையும், மரித்தோரை எழுப்புவதையும் காண்பாய் (யோவான் 2-11 அதிகாரங்கள்) என்று கூறுகிறார்.

தேவ ஜனமே, நீங்கள் தேவனை இதுவரை ஒரு கோணத்தில் அறிந்திருக்கலாம், அனுபவித்திருக்கலாம். இது முதல் இதிலும் பெரிதானவைகளைக் காண்பீர்கள். தேவனின் பல கோணங்களையும், வல்லமைகளையும் காண்பீர்கள். அவர் இருதயத்தை அறிந்தவர் மட்டுமல்ல, இருதயத்தை மாற்றக் கூடிய வல்லைமையுள்ளவர். அவர் நம்முடைய வாழ்வின் அனைத்து தேவைகளையும் சந்திக்க வல்லவர். நமக்கு பெரியக் காரியங்களைச் செய்வார்.

**2. திறந்த வானம்**

'திறந்த வானம்' என்பது பரலோகம் நம் அருகில் காணப்படும் என்பதை குறிக்கிறது. தேவ பிரசன்னமும் ஆசிர்வாதமும் இறங்கி வருவதற்கு அடையாளமாக இருக்கிறது. வானம் நமக்காக திறக்கப்படும்போது தேவனுடைய அளவற்ற

ஆசிர்வாதங்களை நாம் எளிதாக பெற முடியும். வானம் திறக்கப்படும் போது **பரலோக வல்லமையை** நாம் பெற முடியும். இயேசுவுக்கு வானம் திறக்கப்பட்டு, ஆவியானவர் புறாவைப் போல அவர்மேல் வந்து இறங்கினார் (மாற்கு 1:9,10). அவர் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்து சோதனைகளை மேற்கொண்டார், வியாதிகளை சுகமாக்கினார், சுவிசேஷத்தை பிரசங்கித்தார் (அப் 10:38, லூக்கா 4:18). தேவன் நம்மையும் அப்படிப்பட்ட வல்லமையினால் நிரப்பி பயன்படுத்துவார்.

வானம் திறக்கப்படும் போது **பரலோக தரிசனங்களையும்**, **வெளிப்பாடுகளையும்** பெற முடியும். எசேக்கியேல், ஸ்தேவான், பேதுரு, யோவான் போன்றவர்களுக்கு வானம் திறக்கப்பட்டது என்று வேதம் கூறுகிறது (எசே 1:1,28; அப் 7:56; 10:11,12; வெளி 4:2; 9:11). அவர்கள் தேவனைக் குறித்தும், ஊழியத் திட்டங்களைக் குறிக்கும், இயேசுவின் வருகையைக் குறித்தும் வெளிப்பாடுகளையும், தரிசனங்களையும் கண்டனர். நமக்கும் தேவன் தரிசனங்களை தந்து ஆசிர்வதிப்பார்.

மேலும் வானம் திறக்கப்படும் போது **பரலோக நன்மைகளை** பெற முடியும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வானந்திரத்தில் 'வானத்தை திறந்து' மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். (சங் 78:23,24) தொடர்ந்து கானான் தேசத்திலும், அவர்கள் கீழ்படிந்து விசுவாசித்து நடக்கும்போது வானம் திறக்கப்பட்டிருக்கும் என்று கர்த்தர் கூறுகிறார். கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாகயாகிய வானத்தைத் திறப்பார் (உபாகமம் 28 : 12)

**3. தேவ தூதர்களின் ஊழியம்**

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக தேவதூதர்களின் உதவியைக் கட்டளையிடுகிறார். அவர்கள் நமக்கு நல்ல செய்திகளை கொண்டு வருகிறார்கள், பணிவிடை செய்கிறார்கள், நமக்காக யுத்தமும் செய்கிறார்கள். செய்தி கொண்டு வரும் தூதர்கள், சகரியா, எலிசபெத், மரியாள் போன்றவர்களுக்கு நம்பிக்கையும், உற்சாகத்தையும் கொடுக்கும் நல்ல செய்திகளை கொண்டு வந்தார்கள் (லூக்கா. 1:13, 18, 19, 28, 30, 35). பணிவிடை மற்றும் பாதுகாக்கும் தூதர்கள், பேதுரு, அப்போஸ்தலர்கள், பவுல் போன்றவர்களை சிறைச்சாலைகளிலிருந்து விடுவித்தார்கள் (அப். 5,12:7-10, 27:23). இயேசுவுக்கு வனந்திரத்திலும் கெத்சமெனே தோட்டத்திலும் பணிவிடை செய்வார்கள் (மாற்கு 1:13, லூக்கா 22:43). தேவ ஜனங்களை பாதுகாக்கிறார்கள் (சங்.91:11, மத்.18:10). யுத்தம் செய்யும் தூதர்கள், நமக்காக யுத்தம் செய்கிறார்கள். எசேக்கியா ராஜாவுக்கு விரோதமாக எழும்பி வந்த அசீரிய படை வீரர்கள் 185000 பேரை ஒரு தூதன் கொன்றுப் போட்டான் (2 இராஜா. 19:35). தேவ ஜனங்களுக்கு விரோதமாக செயல்பட்ட ஏரோது ராஜாவை ஒரு தூதன் அடித்தான் (அப்.12:21-23). இந்த தூதர்கள் சாத்தானோடும் யுத்தம் பண்ணி நமக்காக வெற்றி கொண்டு வருகிறார்கள் (வெளி. 12:7).

வரும் நாட்களில் தேவ தூதர்களின் பணிவிடையை நாம் நிச்சயம் அனுபவிப்போம்! அவர்கள் நம்மை பாதுகாப்பார்கள் (தானி. 6:20-23, 2 இராஜா. 6:13-17), வழி நடத்துவார்கள் (மத். 1:20, 21; அப். 8:26), பராமரிப்பார்கள் (ஆதி. 21:17-20, 1 இராஜா 19:5-7)!

**மூன்று நிபந்தனைகள்**

யோவான் 1:50,51 வசனங்களிலுள்ள வாக்குத்தத்தங்கள் முதலில் நாத்தான்வேலுக்கு கொடுக்கப்பட்டது. அவனிடம் இயேசு கண்ட குணங்கள், நம்மிடமும் காணப்படுமானால் இந்த வாக்குத்தத்தங்களை நாமும் சுதந்தரிக்கலாம்!

**1. கபடற்றவர்களாயிருங்கள்**

இயேசு நாத்தான்வேலைப் பார்த்து, 'இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்' என்றார் (யோவான் 1:47). கபடு என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ள மூல வார்த்தை, ஆதி 27:35 யிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு 'தந்திரம்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 27ம் அதிகாரத்தில் யாக்கோபின் தந்திரம், கபடு, மாய்மாலம், வஞ்சனை மற்றும் ஏமாற்றும் குணத்தை காண்கிறோம். யோவான் 1:47 ல் இயேசு சொன்னதை இப்படி கூறலாம் – ' இதோ யாக்கோபின் குணம் இல்லாத உத்தம இஸ்ரவேலன்'. நாத்தான்வேலைப் போல நாமும் சகலவித கபடையும் களைந்து போடுவோம் (1 பேதுரு 2:2). எவனுடைய ஆவியில் கபடம் இல்லாமல் இருக்கிறதோ அவன் பாக்கியவான் என்று வேதம் கூறுகிறது (சங் 32:1). நம்மிடம் எந்த ஒரு துர்க்குணமும், கபடமும், பொய்யும், ஏமாற்றுதலும், வஞ்சகமும், மாய்மாலமும் காணப்படக் கூடாது (1 தெச 2:3; 1 பேதுரு 2:22; வெளி 14:5)

**2. வேத வசனத்தினால் நிறைந்திருக்கும்**

நாத்தான்வேல் வேதத்தை நன்றாக அறிந்தவனாக இருந்தான் (யோவான் 1:45). அத்திமரத்தின் கீழிலிருந்து வேதத்தை தியானித்து கொண்டிருந்திருப்பான் என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். ஆதியாகமம் 28:12 யை இயேசு அவனுக்கு ஞாபகப்படுத்துகிறார். பிலிப்பவும் நாத்தான்வேலும் பழைய ஏற்பாட்டில் மேசியாக் குறித்தும், அவருடைய வருகையை குறித்தும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள். நாத்தான்வேலுக்கு வேதம் தெரிந்தபடியால், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ என்ற நியாயமான கேள்வியை கேட்டான். ஏனெனில் பழைய ஏற்பாட்டில் நாசரேத்திலிருந்து இயேசு வருவார் என்று எங்கும் கூறப்படவில்லை. நாமும் பெரோயா பட்டணத்தாரைப் போல வேதத்தை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப் 17:11). நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் வேதம் என்ன சொல்லுகிறது என்பதை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும்.

**3. விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்**

நாத்தான்வேல் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் இஸ்ரவேலின் ராஜா என்றும் கண்டுக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் விசுவாசித்தான் (யோவான் 1:49, 50). அவரை உண்மையாக பின்பற்றுகிற சீஷனாக மாறினான். தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கு விசுவாசம் திறவுகோலாக இருக்கிறது (எபி 6 : 11-12). விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார் (மாற்கு 9:23). நாம் விசுவாசித்தால் நிச்சயம் இதிலும் பெரிதான காரியங்களைக் காண்போம்! அல்லேலூயா!

# சபையில் எப்படி நடந்து கொள்வது ?



**1. சபை ஒரு குடும்பம் (எபேசி 3:15; 4:6)**

ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நம்புவதுடன், ஒருவரை ஒருவர் மதித்தும், (ஒத்துழைத்தும்) வாழ வேண்டும்.

**2. சபை ஒரு ஐக்கியம் (அப் 2:42-45 ; 1 யோவான் 1:3)**

ஆகவே நாம் நம்முடைய செல்வங்களையும் மற்ற ஆசீர்வாதங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்தும் மற்றவர்களின் பிரச்சனைகளிலும், துன்பங்களிலும் தாங்கவும் வேண்டும்.

**3. சபை ஒரு சரீரம் (1 கொரி 12:12,17 ; எபேசி 4:16)**

ஆகவே அவயவங்களாகிய நாம் சுயநலமில்லாமல் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வதுடன், அன்புடனும் இரக்கத்துடனும் பலவீனமானர்களுக்கு உதவ வேண்டும்.

**4. சபை ஒரு கட்டிடம் (எபேசி 2:19-22 ; 1 கொரி 3:9)**

ஆகவே ஜீவனுள்ள கற்களாகிய நாம், தேவன் நம்மை வைத்துள்ள இடத்தில் தாழ்மையுடனும், மகிழ்ச்சியுடனும், யாரையும் வெறுக்கமானும் தற்பெருமை கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

**5. சபை ஒரு பள்ளி (எபேசி 3:18,19 ; 4:11-14)**

ஆகவே நாம் தேவனை அறியும் அறிவில் வளரவும், பூரண புருஷராகவும் பரிசுத்தவான்களின் கூடுகையைத் தவிர்த்தல் கூடாது.

**6. சபை ஒரு மந்தை (1 பேதுரு 2:25 ; 5:2-5)**

ஆகவே நாம் தன்னிச்சையாக செயல்படாமல், மற்றவர்களைச் சார்ந்தும், நாம் எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைப்பதுடன், நம் ஆத்தும மேய்ப்பரைப் பின் தொடர வேண்டும்.

**7. சபை ஒரு வீடு (1 திமோ 3:15 ; எபி 3:6)**

ஆகவே அவ்வீட்டிலுள்ளோரை தேவன் ஆசீர்வதிக்கும் பொருட்டு கிறிஸ்துவை அறியும் அறிவாகிய சுகந்த வாசனையால் அதை நிரப்ப வேண்டும்.

**8. சபை ஒரு பண்ணை (1 கொரி 3:9 ; எபி 6:7-12)**

ஆகவே நாம் அதிக கனி தரும் பொருட்டு பரிசுத்த ஆவியானர் அதிகதிகம் ஊற்றப்பட்ட அனுபவத்தைப் பெற வாஞ்சிக்க வேண்டும்.

**9. சபை ஒரு சேனை (எபேசி 6:12 ; 2 கொரி 10:3-6 )**

ஆகவே நாம் சத்துருவின் தாக்குதலுக்குக் கவனமாயிருந்து, சாத்தானுடைய கட்டுகளிலிருந்து மக்களை விடுவிக்க ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் வீர நடைபோட வேண்டும்.

**10. சபை ஒரு விளக்கு (மத் 5:14-16 ; பிலிப் 2:14-16)**

ஆகவே நாம் இவ்வுலகிற்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, உலகின் ஒளியான இயேசுவுக்கு தொடர்ந்து சாட்சி பகர்ந்து இருளை அகற்ற வேண்டும்.

**மொழியாக்கம் : Mr. இம்மானுவேல்**

# ஆசீர்வதிக்கப் பிறந்த இயேசு

உலக சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் என்றும் (கி.மு). கிறிஸ்துவுக்குப் பின் என்றும் (கி.பி) பிரித்த சரித்திரநாயகனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் உலகமெங்கும் பலகோடி மக்கள் கொண்டாடுகின்றனர். இயேசு 2017 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் பிறந்த நோக்கம் என்ன? மற்றும் அவரது பிறப்பில் நமது பங்கு என்ன? என்பதைச் சற்று தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

**இயேசு பிறந்த நோக்கம் :**

1. **கடவுளை வெளிப்படுத்த** (To Reveal God) **:**
தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுவே அவரை வெளிப்படுத்தினார் (யோவான். 1:18) என்று வேதம் கூறுகிறது. கடவுளின் அன்பை, மனதுருக்கத்தை, இரக்கத்தை, வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு பிறந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோவான் 14:9) என்று இயேசு சொன்னார். கடவுள் மனிதனாக இவ்வுலகத்தில் 'இயேசு' என்ற பெயரில் பிறந்தார். அவர் மனிதனோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மனிதனுடைய துக்கங்களில் பங்கு பெற்று, மனிதனை அவனுடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார்.

2. **மனிதனை விடுவிக்க** (To REDEEM Man)**:**
இயேசு இவ்வுலகில் இரட்சகராக, விடுவிக்கிறவராகப் பிறந்தார். இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் இரட்சகர் என்பது (மத்தேயு 1:21). இயேசு நம்மைக் கீழ்க்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

✳ **பாவம்** (Sins) : பாவம் இல்லாமல் பிறந்த இயேசு நம்மை சகலவித பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் நம்முடைய ஜென்ம பாவங்கள் அனைத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). உலகத்தில் பிறக்கிற அனைவரும் பாவத்தில் தான் பிறக்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). ஆனால் இயேசு நமக்குப் பாவத்திலிருந்து விடுதலையையும் நித்தியவாழ்வையும் அளிக்கிறார்.

✳ **சாபம்** (Curse) : பலவிதமான சாபங்களின் நிமித்தம் தோல்விகளையும், இழப்புகளையும், ஏமாற்றங்களையும் அடைந்துவரும் மக்களின் சாபங்களை நீக்கி விடுவிக்க இயேசு உலகத்தில் வந்தார். இயேசு மனுக்குலத்தின் அனைத்து சாபங்களையும் தன்மேல் சிலுவையில் ஏற்றுக்கொண்டு மனிதர்களின் சாபங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார் (கலா 3:13). மேலும் உங்கள் வாழ்வில் உள்ள தரித்திர நிலைமைகளைப் போக்க இயேசுவால் கூடும். தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினவர், 5 அப்பங்களையும், 2 மீன்களையும் கொண்டு 5000 பேர்களைப் போஷித்தவர் உங்கள் வாழ்வில் உள்ள குறைகளை, கஷ்டங்களை போக்கி, இயேசு உங்களை விடுவிப்பார்.

✳ **வியாதி** (Sickness) : இயேசு நம்மை வியாதிகளிலிருந்து விடுவித்து நமக்குச் சுகவாழ்வு தரும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமத்தார் (மத். 8:17). அவருடைய தழும்புகளால் சுகமாகிறோம் (ஏசாயா 53:5) என்று பைபிள் கூறுகிறது. சகலவிதநோய்களையும் தீராதவியாதிகளையும் சுகமாக்க இயேசு வல்லவர்.

✳ **பயம்** (Fear) : இயேசு நம்மை பயத்திலிருந்து விடுவிக்கிறார். ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே பீடிக்கப்பட்டுள்ள யாவரையும் விடுதலைப் பண்ண இயேசு பிறந்தார் (எபி. 2:15) என்று வேதம் கூறுகிறது. இயேசு பிறந்தபொழுது பலமுறை "பயப்படாதிருங்கள்" என்ற நற்செய்தியை தூதர்கள் ஜனங்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 1:13, 30; 2:10; மத். 1:20, 24). பயம் ஒரு கொடுமையான உணர்ச்சி. எதிர்காலத்தைக் குறித்த பயம், மரணபயம், தோல்வி பயம் என்று பலவித பயங்கள் இன்று மனிதனை வாட்டுகின்றன. ஆனால் இயேசு இவையெல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

**3. பிசாசின் கிரியைகளை அழிக்க** (To RUIN Satan) **:**

இயேசு பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே பிறந்தார் என்று வேதம் கூறுகிறது. (1 யோவான் 3:8). இன்று பிசாசு மனிதனை மோசம் போக்கிக்கொண்டிருக்கிறான். அநேகருடைய வாழ்க்கையை கெடுத்துக்கொண்டிருக்கிறான். பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று இயேசு கூறினார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட பலரை இயேசு விடுவித்தார். இறுதியாக சிலுவையில் பிசாசை ஜெயித்து, அவன் கிரியைகளை அழித்தார். இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து இன்றும் உயிரோடிருக்கிறபடியால் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் விடுவிக்கிறார் (அப்.10:38).

**இயேசுவின் பிறப்பின் நமது பங்கு**

**1. இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள் :**

உலக இரட்சகராகிய இயேசு பிறக்கும்போது அவருக்கு சரித்திரத்தில் இடம் இல்லை (லூக்கா 2:7) என்று வேதம் கூறுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் யாரெல்லாம் இடக்கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் (யோவான் 1:12). இயேசு இன்றும் உங்கள் இருதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார் (வெளி 3:20). அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் பொழுது உங்கள் உள்ளத்தில் அவர் வருவார். விடுதலையும், சமாதானமும் அளிப்பார்.இன்று உங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் உண்டா?

**2. கிறிஸ்துமஸ் நற்செய்தி மற்றவர்களுக்கு அறிவியுங்கள் :**

இயேசுகிறிஸ்துவின் பிறப்பை அறிந்த மேய்ப்பர்கள் மற்றவர்களுக்கு அந்த செய்திகளை அறிவித்தார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 2:17). இயேசு பிறப்பையும், அவர் பிறந்த நோக்கத்தையும் அறிந்த அன்பானவர்களே, இன்றும் இயேசுவின் பிறப்பை ஒரு முறை கூட அறியாத பல்லாயிரக்கணக்கான மக்கள் நம் பட்டணத்தில், தேசத்தில் உண்டு என்பதை அறியீர்களா? இந்த நற்செய்தியை அறிவிப்பது நம்மேல் விழுந்த மிகப்பெரிய கடமையல்லவா? (1 கொரி. 9:16). இயேசு நமக்காக இவ்வுலகத்தில் வந்து சிலுவையில் மரித்ததை நமக்கு அறிமுகமானவர்கள் அனைவருக்கும் அறிவிப்போம். ஏழை எளியவர்களுக்கு பரிசுகளை கொடுத்து தேவனுடைய அன்பை வெளிப்படுத்துவோம்! கிறிஸ்து இயேசுவின் பிறப்பில் நம் பங்கை நிறைவேற்றுவோம்! தேவன் உங்களை அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

# இண்டர்நெட் ஆபத்தானதா?



தொலைபேசி என்பது உலகில் எந்த ஒரு இடத்தில் இருக்கும் நபரையும் தொடர்பு கொள்ள பயன்படுகிறது. அது போல இண்டர்நெட் என்பது இணைய தள வசதியோடு இருக்கும் உலகின் எந்த ஒரு கம்ப்யூட்டர் களையும் இணைக்க பயன்படுகிறது.

**I. இண்டர்நெட்டின் பயன்பாடு**

- ❖ எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்து, எந்த நபருக்கும் ஒரு தகவலை விரைவில் அனுப்பவோ, பெறவோ பயன்படுகிறது.
- ❖ எந்த ஒரு தலைப்பிலும் வேண்டிய தகவல்களை உலகமெல்லாம் இருந்து சேகரிக்க பயன்படுகிறது.
- ❖ பொழுதுபோக்கிற்கும் பயன்படுகிறது. விளையாட்டு, வீடியோ, குறும்படங்கள்.
- ❖ வங்கியில் போய் செய்ய வேண்டிய அநேக விசயங்களை வீட்டிலிருந்தே இண்டர்நெட் வசதியுடன் செய்திடாலம்.
- ❖ ரயில் நிலையத்தில், பஸ் நிலையத்தில் போய் வரிசையில் நின்று கஷ்டப்பட்டு டிக்கட் பெறுவதைக் காட்டிலும், வீட்டிலிருந்தே சில நிமிடங்களில் டிக்கெட் எடுத்துக்கொள்ளலாம்.
- ❖ கடந்த 2017 ஜுன் மாதத்தின் கணக்கின்படி இந்தியாவில் 45 கோடி பேர் இண்டர்நெட் பயன்படுத்துகிறார்கள். இது 2020க்குள் 70 கோடியை எட்டும் என கருதப்படுகிறது.

**II. இண்டர்நெட் பயன்படுத்துபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காரியங்கள் :**

இண்டர்நெட் மிகவும் பயனுள்ளதாய் இருந்தாலும். வாழ்க்கையை சீரழிக்கக் கூடிய காரியங்கள் அதில் உள்ளன. எனவே கீழ்க்கண்ட காரியங்களை கவனமாய் வாசியுங்கள்.

**1. உங்கள் நேரங்களை வீணாக்காதிருங்கள்:**

அளவுக்கதிகமாய் நேரத்தை இண்டர்நெட்டில் செலவழிக்காதீர்கள். குறிப்பாக பிரதான நேரம். அதாவது நீங்கள் புத்தெழுச்சியோடு இருக்கும் நேரம் கடினமான பாடங்களை படிக்க மிகவும் பயன்படும். எனவே அந்த நேரத்தில் இண்டர்நெட்டில் உட்காராதீர்கள். இண்டர்நெட் உங்கள் நேரத்தை விழுங்கி விடும்.

**2.உங்கள் தூக்க நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

அநேகர் இரவு 10 மணிக்கு மேல் உட்கார்ந்து, நேரம் போகிறதே தெரியாமல் விடிய விடிய உட்கார்ந்திருப்பார்கள். தூக்கம் கெட்டுவிடுகிறது. பகலில் உற்சாகமாக இருக்க முடியாது. உடல் நலம் கெடும். ஒருவருக்கு குறைந்த பட்ச அளவு 6 மணி நேரம் தூக்கம் அவசியம்.

**3. ஜெப தியான நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

ஜெபத்தைவிட வேத தியானத்தை விட முக்கியமானது ஒன்றும் இல்லை. கம்யூட்டருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்களானால், அது உங்கள் விக்கிரகமாக

மாறிவிடும். ஜெபத்தில், வேதத்தில் ஆர்வம் குறைந்துவிடும்.பின்மாற்றம் உங்களை தொடர்ந்து வரும்.

4. **உங்கள் பணத்தை வீணாக்காதீர்கள்:**

இண்டர்நெட்டிற்கு இவ்வளவு பணம் தான் செலவழிக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். அதற்குள் முடித்துவிடுங்கள். பணத்தைக் குறித்து ஆண்டவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

5. **உங்களுடைய சரீர ஆரோக்கியத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதினால் முதுகு வலி, கழுத்து வலி, உடல் பருமன், பார்வை கோளாறு, காது கேட்பதில் பிரச்சனை போன்ற வியாதிகள் வர அதிக வாய்ப்புகள் இருக்கிறது. உடல் கெட்டுப்போன பிற்பாடு எவ்வளவு பணம் செலவழித்தாலும் ஒரிஜினல் கிடைக்காது.

6. **கம்ப்யூட்டரை தனி அறைக்குள் வைக்க வேண்டாம்:**

தனி அறைக்குள் கம்ப்யூட்டர் இருந்தால் தவறான காரியங்களை பார்ப்பதற்கு சோதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. பரிசுத்தம் பாதிக்கப்படும். எனவே குடும்ப அங்கத்தினர்கள் எளிதில் பார்க்கக்கூடிய இடத்தில் இருந்தால் சோதனையை தவிர்க்கலாம்.

7. **குடும்ப உறவுகளை தியாகம் செய்யாதீர்கள்:**

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதனால், மனிதர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குடும்பத்திலுள்ளவர்களோடு பேச நேரம் செலவழிக்க முடிவதில்லை. இதனால் குடும்ப உறவு பாதிக்கப்படுகிறது.

8. **தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்துங்கள்:**

இண்டர்நெட் பயன்படுத்த வேண்டிய அவசியமானால் மட்டும் இண்டர்நெட் பயன்படுத்துங்கள். மற்றபடி பொழுதுபோக்கிற்காக, ஒரு நோக்கமில்லாமல் பயன்படுத்தினால் தேவையில்லாததை பார்த்து, கடைசியில் குற்ற மனச்சாட்சியில் போய் விட வாய்ப்பு இருக்கிறது.

9. **தேவையில்லாத விளம்பரங்களை கிளிக் செய்யாதீர்கள்:**

நாம் பிரயோஜனமான ஒன்றை இணையதளத்தில் பார்க்கும் போது தேவையில்லாத விளம்பரங்கள் தோன்றும். வெளித்தோற்றத்தில் ஒன்றுமில்லாதது போல் இருக்கும். ஆனால் உள்ளே போனால் அது அப்படியே பல தேவையில்லாத இணையதள முகவரிக்கு உங்களை அழைத்துச் சென்று விடும். எனவே முதல் கிளிக் செய்வதிலே கவனம் தேவை. பாவம் நீங்கள் விரும்பும் எல்லைக்கு அப்பால் உங்களை அழைத்துச் செல்லும்.

10. **முன் பின் தெரியாத நபருடன் சேட்டிங் பண்ண வேண்டாம்:**

முன் பின் தெரியாத நபர் நல்லவரா, கெட்டவரா, திருமணம் ஆனவரா, ஆகாதவரா என்பதை அறிய முடியாது. எனவே அவர்களோடு சேட்டிங் பண்ணுவது நல்லதல்ல, எச்சரிக்கையாயிருங்கள். மாட்டிக் கொள்ளாதீர்கள்.

**நன்றி : Rev. நெல்சன்**

| GOALS FOR 2017 | | |
|---|---|---|
| 100 | - | New Families |
| 100 | - | Baptism |
| 100 | - | Holy Spirit Baptism |
| 5 | - | Outreach Ministries |
| 20 | - | New Leaders |
| 20 | - | New Prayer Cells |

| 2017 சபை இலக்குகள் | | |
|---|---|---|
| 100 | - | புதிய குடும்பங்கள் |
| 100 | - | ஞானஸ்நானம் |
| 100 | - | பரிசுத்த ஆவி அபிஷேகம் |
| 5 | - | புதிய கிராம ஊழியங்கள் |
| 20 | - | புதிய தலைவர்கள் |
| 20 | - | புதிய ஜெபக்குழுக்கள் |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Prayer Cells | Wed/Thu - புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | Ist Friday - வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | IVth Friday - வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Magazine Subscription**
Bi -Monthly : Rs.20/-
Yearly : Rs.100/-
Postage : Rs.25/- Extra

**Send Your prayer requests**
**@**
**www.cityrevivalagchurch.org**

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

***Come with your friends & family & Receive the blessings of God***



**Sunday School is conducted for kids below 14 years**





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org